# குளித்தலை நகராட்சி

23.08.2018.ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி தெருவிளக்குகள் பழுதடைந்தவற்றில் பழுதுநீக்கி எரியவிட தேவையான மின் உபகரணங்கள் வாங்கவேண்டியது அவசியம். மின்கம்பியாளர், மின்பணியாளர் குறிப்பின்படியானவற்றை வாங்க, ரூ.9.50 லட்சத்திற்கான மதிப்பீட்டில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள்பெற நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2296/2018/இ1)

பொருள்– 02. குளித்தலை நகராட்சிப் பகுதியில் தற்போதுள்ள குடியிருப்பு வீடுகள் 8412.ல் பெறப்படும் குப்பைகள் கையாளும் பணிக்கு, சிறப்பு திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2018–2019.ன்கீழ் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை சேகரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு கூடுதல் வாகனங்கள் தேவைப்படுகிறது.

| வ. எண். | விபரம் | தேவை | தற்போதுள்ளது / அனுமதி வழங்கப்பட்டது | கூடுதல் தேவை | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1) | பேட்டரியில் இயங்கும் வாகனங்கள் | 13 | 3– CMA – AS Roc.No.22866, Dated:-23.08.2018 | 10 | 18.00 |
| 2) | இலகுரக வணிக வாகனம் | 3 | 2– தற்போது உள்ளது. | 1 | 5.60 |
| | | | **மொத்தம்** | **11** | **23.60** |
| **(ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து அறுபதாயிரம் மட்டும்** | | | | | |

மேற்கண்ட மதிப்பீட்டினை, தூய்மை இந்தியா திட்டம் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் நிதிபெற ஏதுவாக, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). நகராட்சி நிதி நிலைமையை கருத்தில்கொண்டு, மதிப்பீட்டுத் தொகை முழுவதும் முழுமான்யமாக வழங்க கோரலாம்.
(ந.க.எண்.2643/2018/இ1)

பொருள்– 03. குளித்தலை நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2018–2019.ல் கீழ்க்கண்ட பணிக்கு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை(MA2) அரசாணை எண்.(MS)82, நாள்– 23.08.2018.ல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நகராட்சியின் பெயர் | பணி | திட்டப்பணியின் மதிப்பு (ரூ.லட்சத்தில்) | நிதி ஆண்டு |
|---|---|---|---|---|
| 13) | குளித்தலை | தார்சாலை மேம்படுத்துதல் | 200.00 | 2018–2019 |

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.

பொருள்– 04. குளித்தலை நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் (2018–2019) தொடர்பான 7.வது மாநில உயர்மட்டக்குழு கூட்டம் நாள்–13.08.2018.ல், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.22866/பி3/2018, நாள்–23.08.2018 மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | 7.வது மாநில உயர்மட்டக்குழு கூட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பணி | பணி விபரம் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1) | நுண் உரக்கிடங்கு மையம் இதர உட்கட்டமைப்பு வசதிகளுடன் (இரண்டு பணிகள் ரூ.70.48 லட்சங்கள்) | (அ). குளித்தலை நகராட்சி வார்டு எண்.24, நகரளவை எண்.128, அண்ணநகர் பூங்காவில் 2 TPD கொள்ளளவுள்ள நுண் உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் | 35.24 |
| 2) | | (ஆ). குளித்தலை நகராட்சி வார்டு எண்.14, நகரளவை எண்.53, ஜெய்மகால் அவென்யூ பூங்காவில் 2 TPD கொள்ளளவுள்ள நுண் உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் | 35.24 |
| 3) | தூய்மை பணிக்கான முதன்மை சேகரிப்பு பணிக்கான வாகனங்கள் | பேட்டரியில் இயங்கும் வாகனங்கள் 3 எண்ணிக்கை வாங்குதல் | 5.40 |
| 4) | நுண் உரக்கிடங்கு | குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கில் 51711–Cum பரப்பளவில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை பயோமைனிங் முறையில் அப்புறப்படுத்துதல் | 340.00 |
| | | மொத்தம் | 415.88 |

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1389/2018/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு கொசு ஒழிப்பு முன் எச்சரிக்கை நடவடிக்கையாக முதிர்வு கொசுக்களை ஒழிப்பதற்கு கை புகைபோக்கி இயந்திரம்–5 மற்றும் கேஸ் சிலிண்டர் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,30,000/–க்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2415/2018/எச்1)

பொருள்– 06. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு கிருமி நீக்கம் செய்வதற்கு 2018–2019.ம் ஆண்டுக்கான கிருமி நாசினி பொருள்கள் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பொது இடங்கள், பொது கழிப்பிடங்கள், பேருந்து நிலையம் மற்றும் டெங்கு தடுப்பு பணிக்காக வீடுகளில் உள்ள தொட்டிகளில் கிருமி நீக்கம் செய்வதற்கு பிளீச்சிங் பவுடர்–4 டன், சுண்ணாம்புதூள்–8 டன், பினாயில்–500 லிட்டர், ஆசிட்–500 லிட்டர் மற்றும் லெமன் கிராஸ் பினாயில்–10 லிட்டர் ஆகிய கிருமி நாசினி பொருள்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் மேற்கொள்ள இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2633/2018/எச்1)

பொருள்– 07. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு 2018–2019ம் ஆண்டுக்கான தளவாட சாமான்கள் (1)–மண்வெட்டி–75(பிடியுடன்), (2)–நான்குபல்கொக்கி பிடியுடன்–75, (3)–கடப்பாறை–8, (4)அலுமினிய அன்னக்கூடை–150, (5)–இரும்புசட்டி–75, (6)–அரிவாள்–20, (7)–கூட்டுமார்–100, (8)–மூங்கில்கூடை–30, (9)–தென்னைமாறு–50, (10)–சாக்கடை சுத்தம்செய்யும் அகப்பை–100 ஆகிய தளவாட சாமான்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2634/2018/எச்1)

*******

**குளித்தலை நகராட்சி**

23.08.2018.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 158 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 2 | 2 | 159 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 3 | 3 | 160 | பதிவு செய்யப்பட்டது. |
| 4 | 4 | 161 | பதிவு செய்யப்பட்டது. |
| 5 | 5 | 162 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 163 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 164 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.